THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Thursday, the 3rd December 1970

The House met in the Council Chamber, Fort St. George, at ten of the clock, Mr. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

STARRED QUESTIONS

Central Marine Fisheries Research Institute

*39· *Q.*—THIRU M. RAJAH IYER :— Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether the State Government was consulted by the Centre regarding the shifting of the Central Marine Fisheries Research Institute from Mandapam Camp to Ernakulam ;

(*b*) if so, the opinion offered by the State Government in the matter ;

(*c*) whether any representation has been received by the Government pleading for its retention at Mandapam Camp ; and

(*d*) if so, the action taken by the Government thereon ?

மத்திய கடல் மீனள ஆராய்ச்சி நிலையம், மண்டபம்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மத்திய கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தை, மண்டபம் முகாமிலிருந்து எர்ணுகுளத்திற்கு மாற்றுவது குறித்து மாநில அரசை மத்திய அரசு கலந்தாலோசித்ததா ?

(இ) ஆமெனில், இது குறித்து மாநில அரசால் தெரிவிக்கப்பட்ட கருத்து என்ன ?

(உ) மண்டபம் முகாமிலேயே அந்த நிலையத்தை வைத்திருக்கக் கோரி விண்ணப்பம் ஏதேனும் அரசால் பெறப்பட்டுள்ளதா ?

(எ) ஆமெனில், அதன்பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) இல்லை.

(இ) இருப்பினும் ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை மாற்றுதல் குறித்த கருத்தைப் பரிசீலிப்பதற்கு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தால் அமைக்கப்பட்ட குழுவின் பெரும்பான்மை

உறுப்பினர்கள் தலைமையிடத்தை மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்றவேண்டுமென்று பரிந்துரைத்துள்ளனர் என இவ்வரசுக்குத் தெரிய வந்தவுடன் நம் மாநில அரசு அம்முடிவைக் கடுமையாக எதிர்த்தது. தேவைப்படுமானல் அதனைச் சென்னைக்கு மாற்றலாம் என்றும் கருத்துத் தெரிவித்தது.

(உ) ஆம், எண்ணற்ற முறையீடுகள் வந்துள்ளன.

(எ) இந்திய அரசின் தீர்மானத்தைச் செயல் படுத்தாமல் நிறுத்தி வைக்க வேண்டுமென்று பிரதமரைக் கேட்டுக்கொண்டு நமது முதல் அமைச்சர் பிரதமருக்கு ஒரு தனிக் கடிதம் அனுப்பினர். (இக்கருத்து மீனளத்துறையின் பொறுப்பிலுள்ள மாநில அமைச்சராலும், மத்திய அரசின் உணவு வேளாண்மைத்துறை இராஜ்ய அமைச்சருடனும் விவாதிக்கப்பட்டது).

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் இது முக்கியமான கேந்திர ஸ்தானமாகும். இதில் பல மக்கள் வேலை செய்கிறார்கள். இப்படி நமது மாநிலத்திலுள்ள முக்கியமான ஆராய்ச்சி நிலையத்தை நமது மாநில அரசைக் கேட்காமலேயே மத்திய அரசு மற்ற இடத்திற்கு மாற்ற முடிவு செய்தது சரியா? இதை நமது மாநில அரசு மத்திய அரசிற்கு எடுத்துக்கூறி இங்கிருந்து அந்த நிலையத்தை மாற்றக் கூடாது என்று தடுத்து நிறுத்தியதற்காக உண்மையில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதி மக்கள் நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள். ஒரு சில உயர் அதிகாரிகள் எர்ணகுளம் செல்கிறார்கள். அத்துடன் சில குமாஸ்தாக்களும் சில பணியாளர்களும் மாற்றப்படுவார்கள் என்ற ஐயம் இருக்கிறது. இதை அரசாங்கம் போக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: அங்குள்ள ஆராய்ச்சி நிலையத்தைக் கொச்சிக்கு மாற்ற வேண்டுமென்று இதற்காக ஒரு தனிக் குழு மத்திய அரசினல் நியமிக்கப்பட்டது. இதில் இருக்கிற பெரும்பாலான அங்கத்தினர்கள் அந்த ஆராய்ச்சி நிலையத்தைக் கொச்சிக்கு மாற்றுவதுதான் சிறந்தது என்று சிபாரிசு செய்தார்கள். அது தெரிந்தவுடன் நம்முடைய அரசு அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. மத்திய அரசு இதை மாற்ற வேண்டுமென்று முடிவு செய்தபொழுது, பல விண்ணப்பங்கள் வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதினர்கள். நானும் மத்திய அமைச்சருடன் பேசினேன். அந்தப் பேச்சு வார்த்தையின்படி இப்போதிருக்கிற ஆராய்ச்சி நிலையம் அங்கேயே இருக்கும். ஆனல் டைரக்டர் ஒருவரும் நான்கு கிளார்க்குகளும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மட்டும்தான் மாற்றப் படுவார்கள். 200க்கு மேற்பட்ட தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் அங்கே இருப்பார்கள். ஆகையால் அதற்குள்ள முக்கியத்துவம் அதிகரிக்கும் அளவில் இருக்குமே தவிர, குறைக்கப்பட மாட்டாது என்று மத்திய அமைச்சர் உறுதி கூறியிருக்கிறார்.

திரு. எம். ராஜா அய்யர் : பல ஆண்டுகளாக அந்த ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றிய டைரக்டர் அவர்கள் உலகப் புகழ் பெற்ற பையாலாஜிஸ்ட் டாக்டர் ஜான் என்ற பெரியார் ஆவார். அவர்

3rd December 1970]

தலைவராக இருந்து வந்ததாலேயே அந்தக் கேந்திர ஸ்தானத்திற்கு ஒரு முக்கியத்துவம் கிடைத்தது. அவர் மாத்திரம் எர்ணாகுளத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமென்ன? அதை எதிர்த்து நம் மாநில அரசு ஏன் போராடக் கூடாது? எதிர்த்து ஏன் கருத்துத் தெரிவிக்கக் கூடாது? இத்தனை ஆண்டுகளாக அந்த நிறுவனத்தின் தலைவராக இருந்து டோக்கியோவுக்கும் பிற நாடுகளுக்கும் சென்று புகழை உயர்த்திய பெரியார் அவர். அந்த நிலையம் மட்டும் மண்டபத்தில் இருக்கவும் அவர் அங்கே இருக்கக் கூடாது என்ற நிலைமையும் வந்தால், அந்தக் கேந்திரத்தின் முக்கியத்துவம் குறையும் அல்லவா? ஆகையால் அவரையும் மண்டபத்திலேயே இழுத்து வைத்துக்கொள்ள மாநில அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: இது வரையில் அந்தத் தலைவர் மண்டபத்தில்தான் இருக்கிறார் என்ற பெயரே தவிர, அவர் மாதத்தில் 25 நாட்கள் அங்கே இருப்பதில்லை. இந்தியாவின் பல்வேறு இடங்களில் பல மாநிலங்களில் அதனுடைய கிளைகள் இருப்பதால், அவர் டூரிங் ஆபிசராக இருந்து அங்கங்கே மாறி மாறிச் சென்று வருவார். எர்ணாகுளத்திற்குச் சென்றாலும், அங்கே மாதத்திற்கு ஐந்து நாட்கள்தான் இருக்க முடியும். அவர் எங்கேயிருந்தாலும், எல்லா இடங்களிலும் சரி பங்காகத்தான் செயல்பட வேண்டும். அப்படி அவர் எல்லா இடங்களிலும் செயல்படுவார்.

DEPUTY CHAIRMAN: The question is over.

(*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member).

II. ANNOUNCEMENTS

(1) *Message from the Governor*

MR. CHAIRMAN: I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970.

(2) *Messages from the Assembly*

MR. CHAIRMAN: I have received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970) and the Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970 (L.A. Bill No. 47 of 1970), as passed by the Legislative Assembly, and signed by him for the concurrence of the Council.